சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை–IIT மற்றும் NIT ஆகிய உயர் தொழிற்நுட்பக் கல்லூரிகளில் பழங்குடியின மாணாக்கர்கள் சேர்ந்து பயிலும் வகையில் போட்டித் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி அளித்தல்–2013-2014-ஆம் நிதி ஆண்டிற்கான ஒதுக்கீடு செய்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(பமே2)துறை

அரசாணை(நிலை) எண். 76

நாள். 15.10.2013.
விஜய–திருவள்ளுவர் ஆண்டு 2044
புரட்டாசி திங்கள் 29ஆம் நாள்.
படிக்கப்பட்டது.

இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை கடித எண்.ப.மே/ஆ1/1395/2013–1, நாள். 13.06.2013 மற்றும் 12.07.2013.

******

ஆணை:

2013–2014–ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள். "தற்போது தமிழ்நாட்டிலிருந்து IIT மற்றும் NIT போன்ற உயர் தொழிற்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் பழங்குடியின மாணக்கர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. இந்த குறைபாட்டினைக் களையும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மாணாக்கர்கள் அதிக எண்ணிக்கையில் IIT மற்றும் NIT போன்ற புகழ் பெற்ற உயர் தொழிற்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயின்று, உயர் தொழிற் நுட்பங்களை சிறப்பாகக் கற்று, கல்வியில் முன்னேற்றம் அடையும் வகையில் தகுதியான 50 பழங்குடியின மாணாக்கர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு தனியார் பயிற்சி நிறுவனத்தின் மூலம் உயர் சிறப்பு பயிற்சி அளிக்கும் திட்டத்தினை ரூ.1.00 கோடி செலவில் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2. பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் தற்போது தாட்கோ மூலம் ஆதிதிராவிட மாணவர்களுக்கு JEE, AIEEE ஆகிய போட்டி தேர்வுகளுக்கு சிறந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது என்றும், இதே போன்று நடப்பு நிதியாண்டில் பழங்குடியின மாணவர்களுக்கும் IIT/JEE/AIEEE போட்டித்தேர்வு பயிற்சி வழங்க முன்வரும் நிறுவனங்களை தமிழ்நாடு ஒளிவு

(கு.தி.பா)...

மறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ஐ பின்பற்றி பயிற்சி நிறுவனம் தெரிவு செய்யலாம் எனவும், மேலும் இரு வருட கால பயிற்சி அதாவது 11-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பில் பயிலும் (பள்ளியில் சேர்ந்து) மாணாக்கர்களுக்கு தொடர்ந்து 2 வருட கால பயிற்சி அளிக்க தேவைப்படும் செலவினம் நபர் ஒன்றுக்கு ரூ.2 இலட்சம் வீதம் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார். அவ்விவரங்கள் பின்வருமாறு:-

| | | (தோராயமாக) |
|---|---|---|
| 1 | பயிற்சி கட்டணம்(கையேடு உட்பட) (11-மற்றும் 12-ம் வகுப்பு) | ரூ.1,78,000/-நபர் ஒன்றுக்கு |
| 2 | இடை நிகழ் செலவினம் (மாணவர்களுக்கு) மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் 24 மாதங்களுக்கு | ரூ.12,000/-நபர் ஒன்றுக்கு |
| 3 | விளம்பரம் / நிர்வாகம் / மதிப்பீடு/ கண்காணிப்பு மற்றும் எதிர்பாராத இதர செலவினம் | ரூ.10,000/-நபர் ஒன்றுக்கு |
| | ஆக மொத்தம் | ரூ.2,00,000/- நபர் ஒன்றுக்கு |

(பயிற்சி கட்டணம் ஒப்பந்தப்புள்ளியின்படி மாறுதலுக்கு உட்பட்டது)

3. பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனடிப்படையில் 2013-2014-ஆம் ஆண்டு முதல் தகுதியான 50 பழங்குடியின மாணவ / மாணவிகளை தேர்வு செய்து அவர்களுக்கு விதிகளின்படி தேர்வு செய்யப்படும் பயிற்சி நிறுவனம் மூலம் ஆண்டிற்கு ஒரு மாணவருக்கு ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) வீதம், இரு ஆண்டு கால பயிற்சியினை ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்)-ல் செலவினத்தில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் செயல்படுத்த அனுமதியளித்தும் 2013-2014-ஆம் ஆண்டில் இச்செலவினத்திற்காக தேவைப்படும் தொகை ரூ.50,00,000/-ஐ (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டிலிருந்து ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225-ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-02-பழங்குடியினர் நலன்-796-பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம்-பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்-II-மாநிலத் திட்டம்-JY-விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்-09- உதவித்தொகை-01-நடப்பு செலவுக்கான உதவித் தொகை.
(து.தொ.கு. 2225 02 796 JY 09 12)

(த.தி.பா)...

5. தாட்கோவுடன் கலந்தாலோசித்து உரிய நாளிதழில் விளம்பரம் அளித்து நுழைவுத் தேர்வு நடத்தி தேர்ந்தெடுக்கப்படும் 50 பழங்குடியின மாணவர்களுக்கு தேர்வு செய்யப்படும் நிறுவனம் மூலம் இச்சிறப்பு பயிற்சியளிக்க இயக்குநர், பழங்குடியினர் நலன் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.57213/ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை/2013 நாள்.11.10.2013–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
பழங்குடியினர் நல இயக்குநர் (பொ), சென்னை–5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–101.
முதன்மை மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–6/18/35.

நகல்:–
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை–9.
நிதித்(ஆதி(ம)பந)துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்/அநமு-I.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.